ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/30 - 2022 ජූලි මස 17 වැනි ඉරිදා - 2022.07.17

*2288/30 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### பதில் சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**பதில் சனாதிபதி அவர்களினால் (அரசியலமைப்பின் 40(1) (இ) ஆம் உறுப்புரையின் பிரகாரம்) செய்யப்படும் பிரகடனம்**

முத்திரை

**ரணில் விக்கிரமசிங்க**

இலங்கையில் மக்கள் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்காக இவ்வாறு செய்தல் உசிதமானதாகவுள்ளதென நான் அபிப்பிராயப்படுவதினால்,

அரசியலமைப்பின் 40(1) (இ) ஆம் உறுப்புரையின் பிரகாரம், பதில் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அக்கட்டளைச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் இலங்கை பூராகவும் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதியன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

(அரசியலமைப்பின் 40(1) (இ) ஆம் உறுப்புரையின் பிரகாரம்) பதில் சனாதிபதியின் ஆணைப்படி,

**காமினீ செனரத்,**
சனாதிபதியின் செயலாளர்.

1A - G 37080 — 366 (2022/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*